Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.** 153/2022 |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW**3 |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | முகம்மது சதக்கத்துல்லா |
| Father/Husband Name | : | ஜமாலுதீன் முகம்மது |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.10.2022.

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் முருகன் கோவில் எதிரே சக்தி பவர் டூல்ஸ் என்ற கடையில் தங்கி வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனைஅடியானை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 1 1/2 வருடத்திற்கு முன்பு கேணிக்கரை போலிசார் என்னிடம் வந்து விசாரித்தார்கள். கொலை நடந்த சம்பவம் பற்றி என்னிடம் கேட்டார்கள். நான் தெரியாது என்று சொல்லிவிட்டேன். இறந்துபோன பனைஅடியான் எப்படி, யாரால் தாக்கி இறந்தார் என்று எனக்கு தெரியாது. ஆனால் அடித்து கொலை செய்யப்பட்டார் என்ற விவரம் மட்டும் எனக்கு தெரியும். இவ்வழக்கு பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை –

போலிஸ் விசாரணையில் கடந்த 05.03.2021ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான் எனது கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது என் கடைக்கு வடக்கே ரோட்டில் என் கடைக்கு அருகில் உள்ள ஆட்டோ மற்றும் டாடா ஏசி ஸ்டாண்டில் இவ்வழக்கில் இறந்துபோன பனைஅடியான் என்பவரை ஆஜர் 1ம் எதிரி பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும் 2ம் எதிரி கஜேந்திரன் என்பவர் அருவாளால் பனைஅடியானின் தலை, கால், முதுகு ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டினார் என்றும் 3ம் எதிரி முத்து முருகன் என்ற செந்தில்குமார் சவுக்குக்கட்டையால் பனைஅடியானை உடலில் மாறி மாறி அடித்தார் என்றும் அங்கிருந்தவர்கள் சத்தம்போட்டு விலக்கிவிடவே எதிரிகள் 3 பேரும் ஆட்டோவில் வண்டிக்காரத் தெரு சாலை வழியாக சென்றுவிட்டார்கள் என்றும் காயம்பட்ட பனைஅடியானை ஆட்டோவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும் அங்கு பனைஅடியான் இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.** 153/2022 |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW**2 |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சகுபர் சாதிக் |
| Father/Husband Name | : | தஸ்தகிர் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.10.2022.

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் செல்லப்பெருமாள் தெருவில் வசித்து வருகிறேன். நான் இராமநாதபுரம் அண்ணாசிலை அருகில் ஸ்பேர் பார்ட் பொருட்கள் வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனைஅடியானை தெரியாது. அ.சா.1 செந்தில் என்பவரை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 1 வருடத்திற்கு முன்பு மாலை 06.00 மணிக்கு நான் கடையில் இருந்தபோது போலிசார் கடைக்கு வந்து என் கடைக்கு எதிரில் கொலை நடந்தது சம்மந்தமாக விசாரித்தார்கள். அப்போது நான் சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். இவ்வழக்கு பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது. பனை அடியான் எப்படி, யாரால் இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 05.03.2021ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான் எனது கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது என் கடைக்கு வடக்கே ரோட்டில் என் கடைக்கு அருகில் உள்ள ஆட்டோ மற்றும் டாடா ஏசி ஸ்டாண்டில் இவ்வழக்கில் இறந்துபோன பனைஅடியான் என்பவரை ஆஜர் 1ம் எதிரி பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும் 2ம் எதிரி கஜேந்திரன் என்பவர் அருவாளால் பனைஅடியானின் தலை, கால், முதுகு ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டினார் என்றும் 3ம் எதிரி முத்து முருகன் என்ற செந்தில்குமார் சவுக்குக்கட்டையால் பனைஅடியானை உடலில் மாறி மாறி அடித்தார் என்றும் அங்கிருந்தவர்கள் சத்தம்போட்டு விலக்கிவிடவே எதிரிகள் 3 பேரும் ஆட்டோவில் வண்டிக்காரத் தெரு சாலை வழியாக சென்றுவிட்டார்கள் என்றும் காயம்பட்ட பனைஅடியானை ஆட்டோவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும் அங்கு பனைஅடியான் இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

Calendar .. .. }
Miscellaneous .. .. }
Preliminary Register .. .. } **S.C.** 153/2022
Sessions .. .. }

} Prosecution – **PW1**
Deposition of witness for } Defence –
} Court –

| | | |
|---|---|---|
| Name | : | பழனி |
| Father/Husband Name | : | உடையார் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.10.2022.

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் எம்எஸ்கே நகரில் வசித்து வருகிறேன். நான் ஜெகன் தியேட்டர் ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனைஅடியான் என்பவரை தெரியும். அவர் இறப்பதற்கு முன்பு முருகன் கோவில் ஸ்டாண்டில் டாடா ஏசி வாகனம் ஓட்டிவந்தார். ஆஜர் 1வது எதிரி அண்ணாமலை மட்டும் எனக்கு தூரத்து உறவினர் ஆவார். மற்ற 2 எதிரிகளையும் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன பனைஅடியான் அவர் ஓட்டி வரும் டாடா ஏசி ஸ்டாண்டில் இறந்து கிடப்பதாக கேள்விப்பட்டேன். அவர் எப்படி, யாரால் தாக்கி இறந்தார் என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது. அன்று இரவு 07.30 மணியளவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அப்போது அங்கு அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார்

என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை –**

போலிஸ் விசாரணையில் கடந்த 05.03.2021ம் தேதி மாலை 04.45 மணியளவில் நான் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலை ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ சவாரிக்காக காத்துக்கொண்டிருந்தேன் என்றும் அப்போது ஆஜர் எதிரிகள் 3 பேரும் இவ்வழக்கில் இறந்துபோன பனைஅடியானின் டாடா ஏசி வண்டியின் கண்ணாடியை உடைக்க பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது பனைஅடியான் தம்பி ரவி என்பவருக்கு நான் தகவல் சொன்னேன் என்றும் கொஞ்ச நேரத்தில் ரவியும், பனைஅடியான் மகன் கபிலன், அவரது உறவினர் பாலாஜி ஆகியோர்கள் அங்கு வந்தார்கள் என்றும் மேற்படியார்கள் மூவரும் எதிரிகள் கையில் வைத்திருந்த ஆயுதங்களை பார்த்து தள்ளி நின்று கொண்டார்கள் என்றும் அப்போது 1ம் எதிரி அண்ணாமலை என்பவர் பனைஅடியானை பார்த்து தேவுடியா மகனே இப்போ பேசுடா பார்ப்போம், இப்ப என்னடா செய்வ என்று சொல்லி பனைஅடியானை தள்ளிவிட்டார் என்றும் வழக்கின் 2ம் எதிரி கஜேந்திரன் கையில் வைத்திருந்த அருவாளால் பனைஅடியானை இடதுபக்கம், வலதுகால் முட்டியின் பின்பக்கம், இடதுகால் தொடையின் பின்பக்கம், இடுப்புக்கு பின்னால், வலதுபக்க முதுகில் ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும் அப்போது 3ம் எதிரி முத்து முருகன் என்ற செந்தில் கையில் வைத்திருந்த சவுக்குக்கட்டையால் பனைஅடியானின் தலை, உடம்பு, கால் ஆகிய இடங்களில் மாறி மாறி அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும் அப்போது எதிரி கஜேந்திரன் வைத்திருந்த அருவாளால் பனைஅடியானை வெட்டும்போது தவறுதலாக ராஜேஸின் வலது உள்ளங்கையில் பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் அப்போது பனைஅடியானின் தம்பி ரவி, பனை அடியானின் மகன் கபிலன் அவர்களை எதிரிகள் கிட்டே வந்தால் உங்களையும் போட்டுத்தள்ளிவிடுவோம் என்று சொல்லிவிட்டு 3 எதிரிகளும் அவசரமாக ஆட்டோவில் வண்டிக்காரத் தெருப்பக்கம் சென்றுவிட்டார்கள் என்றும் பிறகு அங்கிருந்து அவர்கள் காயம்பட்ட பனைஅடியானை ஆட்டோவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் சொல்லிவிட்டு 1ம் எதிரி

எனக்கு உறவினர் என்பதால் இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதால் தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.